சுற்றறிக்கை இல:-04/00

எனது இல.என்ஈபி/திரு/கூஸ்ஈ/பி/2.
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை,
2000.08.28.

சகல கூட்டுறவு உதவி
ஆணையாளர்களுக்கும்.

## இயக்குநர் சபைக் கூட்டங்களுக்கு சமூகமளிக்கும் கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர்களுக்கான படி வழங்கல்.

01. கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர்சபைக் கூட்டங்களில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்குபற்றி பொருத்தமான ஆலோசனைகளை வழங்குதல் அவர்களது பிரதான கடமைகளில் ஒன்றாகும். இக் கூட்டங்களுக்கு அவர்கள் சமூகமளிக்க வேண்டியதின் முக்கியத்துவம் உணரப்பட்டதால் இது பற்றி தாபனப்பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டு குறிப்பிட்ட இச் சேவைக்காக படிவழங்குவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

02. இயக்குநர்சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்கும் கூட்டுறவுப் பரிசோதகர்கள் அச்சங்கங்களது வியாபார நடவடிக்கைகள் நிதிநிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக சங்கங்கள் சட்டமுரணற்ற வகையில் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்ற அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்குதல் வேண்டும். இதன்மூலம் சங்கங்களை செயற்றிறன் உள்ளனவாக மாற்றமுடியும் எனக் கருதப்படுகின்றது இக்காரணத்தால் மாதம் ஒன்றுக்கு ரூபா.600/- என்ற உச்சஎல்லையின்கீழ் கூட்டம் ஒன்றுக்கு ரூபா.200/- வீதம் சங்க நிதியிலிருந்து இக் கூட்டத்துக்கு சமூகமளிக்கும் உத்தியோகத்தர்களுக்கு பின்வரும் கட்டுப்பாடுகளுக்கு அமைவாக படி வழங்க அனுமதிக்கப்படுகின்றது.

03. கட்டுப்பாடுகள்:-

### 3.1. கொடுப்பனவுக்கு உரித்துடையோர்:-

(அ) கீழே குறிப்பிடப்படும் கூட்டுறவுச் சங்கங்களது கூட்டங்களுக்கு சமூகமளிக்கும் அச்சங்கத்துக்கு பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள்.

(ஆ) வருடாந்தக் கணக்காய்வு அறிக்கையை இயக்குநர்சபைக்கு சமர்ப்பிப்பதற்காக அக்கூட்டத்துக்கு சமூகமளிக்கும் கணக்காய்வாளர்.

### 3.2. உச்ச எல்லை:-

ஒரு பிரிவில் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்களை மேற்பார்வை செய்யும் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் ஒருவர் ஒரு சங்கத்தில் இருந்தோ/ஒன்றுக்கு மேற்பட்ட சங்கத்தில் இருந்தோ மேற்படி படியைப் பெறநேர்ந்தால் அதன் உச்சஎல்லை எவ்விதத்திலும் மாதம் 600/-க்கு மேற்படல் ஆகாது.

3.3. **வழிமுறைகள்:-**

(அ) கடமை நேரத்தின் பின்/ விடுமுறை தினங்களில் நடைபெறும் இயக்குநர்சபைக் கூட்டத்துக்கே படியினை பெற்றுக்கொள்ள முடியும்.

(ஆ) இயக்குநர்சபைக் கூட்டமொன்றில் குறைந்தது 02 மணித்தியாலத்துக்கு மேல் பங்குபற்றியிருத்தல் வேண்டும்.

(இ) கூட்டுறவு அலுவலரது ஆலோசனைகளும், அறிவுரைகளும் தேவைக்கேற்ப கூட்டக்குறிப்புகளில் இடம்பெறச் செய்தல் வேண்டும்.

(ஈ) கொடுப்பனவுக் கோரிக்கையானது உதவி ஆணையாளரது சிபார்சினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) உரிய உத்தியோகத்தர் கூட்டத்திற்கு சமூகமளித்து தனது ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கியுள்ளனர் என்பதையும் இவை சங்கத்தின் நலனுக்கு எவ்வகையில் உதவியுள்ளது என்பதையிட்டும் திருப்திப்படுமிடத்து மட்டுமே உதவி ஆணையாளர் சிபார்சினை வழங்குதல் வேண்டும்.

04. மேற்படி கொடுப்பனவானது 01.07.2000ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

05. இக்கூட்டப்படி தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சகல சுற்றறிக்கைகளும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

06. **படியினை வழங்க தகுதியுள்ள சங்கங்கள்.**

6.1. ப.நோ.கூட்டுறவுச் சங்கங்கள்.
6.2. 2ம்படி கூட்டுறவுச் சங்கங்கள்.
6.3. பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கமும், சமாசங்களும்.

ஆ.சுப்பிரமணியசர்மா,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
(வ.கி)

பிரதி:- 01. செயலாளர்,
மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி,கூட்டுறவு,
வீதி அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சு,
வ.கி.மா., திருகோணமலை. - தகவலுக்காக.

02. கூ.அ.உ.ஆணையாளர்,
கொழும்பு. - தகவலுக்காக.

03. அதிபர்,
கூட்டுறவுக்கல்லூரி, வ.கி.மா., திருகோணமலை. - தகவலுக்காக.

04. ப.நோ.கூ.சங்கங்கள்/பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்.